THE COURT OF THE DISTRICT MUNSIF, TIRUMANGALAM

**DEPOSITION OF WITNESS (D.W.3 )**

Solemnly affirmed and sworn by Tmt.Nagavalli Grade III Bench clerk on 10.08.2022. in accordance with the provisions of Act XX111.

அசல் வழக்கு எண்– 158/2015

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுரேந்திரன் | தாலுகா | |
| தகப்பனார் பெயர் | | ஊர் | |
| தொழில் | | மதம் | |
| வயது | | | |

பி.வா.சா. 3 முதல் விசாரணை

நான் இந்த வழக்கில் பிரதிவாதி தரப்பு 3 வது சாட்சியாவேன். நான் தற்போது கள்ளிக்குடி தாலுக்கா வட்டாச்சியராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து மாவட்ட வருவாய் அலுவலகத்தில் அழைப்பாணை அனுப்பபப்பட்டு அவருக்கு பதிலாக நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். மாவட்ட வருவாய் அலுவலர் என்னை நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க கொடுத்த அனுமதி கடிதத்தை தாக்கல் செய்கிறேன். (**அனுமதி கடிதம் சா.சா.ஆ. 3. ஆக குறியீடு செய்யப்படுகிறது**). நீதிமன்றத்தில் இருந்து ஒரு சில ஆவணங்களை கொண்டுவருவதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 16.06.2015 ஆம் தேதியிட்ட ந.க.எண். 9284/2015/இ3 அறிக்கையும் அதனுடன் இணைத்த 01.06.2015 தேதியிட்ட மண்டல துணை வட்டாச்சியரின் அறிக்கையும் 08.04.2015 தேதியிட்ட சுந்தர் மற்றும் பாஸ்கர் ஆகியோர்கள் ஜமாபந்தி அதிகாரியிடம் கொடுத்த பட்டா மாறுதல் மனு மற்றும் வருவாய் தீர்ப்பாய ஒப்புதல் சீட்டு கிராம நிர்வாக அலுவலரின் அறிக்கையை தற்போது

கொண்டுவந்துள்ளேனா என்றால் அந்த ந.க.எண். 9284/2015/இ3 ஆவணம் திருமங்கலம் தாலுகா அலுவலகத்திலிருந்து உசிலம்பட்டி வருவாய்கோட்டாச்சியர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுவிட்டது. ஆனால் அதனுடன் என்ன என்ன ஆவணங்கள் இனைக்கப்பட்டுள்ளது என்பதை அந்த கோப்பை எடுத்து பார்த்தால்தான் தெரியவரும். ந.க.எண். 9284/2015/இ3 அனுப்பியதற்கான அனுப்புகை பதிவேட்டை தற்போது கொண்டுவந்துள்ளேன். அந்த பதிவேட்டின் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். (**அனுப்புகை பதிவேட்டின் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்ட நகல் சா.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). அந்த ஆவணங்களை கொண்டு வரமுடியுமா என்றால் அதனை தேடிப்பார்த்துதான் கொண்டுவர முடியும். அதனை தேடிப்பார்ப்பதற்கு 1 மாதம் கால அவகாசம் வேண்டும்.

(சாட்சியின் வேண்டுகொளுக்கு இணங்க ஆவணங்களை முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)